LIBRARY
02 JUN 2013
Eastern University, Sri Lanka.

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## பொதுக் கலைமாணித் தேர்வு – 2005/2006 (வெளிவாரி)
## (ஏப்ரல் 2008)

## EDU 101 கல்வியியல் அடிப்படை எண்ணக்கருக்களும் மனிதவள அபிவிருத்தியும்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

**ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.**

01. ஜோன் டியூவி கல்விக்கு அளித்த வரைவிலக்கணத்தைக் கூறி அவர் கூறிய பயன்பாட்டு வாதக்கல்விக் கருத்துக்கள் எந்தளவுக்கு இன்றைய கல்வியை மேம்படுத்த உதவியாக உள்ளன என்பதை ஆராய்க.

02. மனித வள அபிவிருத்தியை ஏற்படுத்துவதில் கல்வி எந்தளவுக்கு ஒரு சக்திவாய்ந்த கருவியாகத் தொழிற்படுகின்றது என்பதற்கு உதாரணங்கள் தந்து ஆராய்க?

03. முன்பள்ளிக் கல்வி தொடர்பாக புரோபல், சுசான்ஐசாக் என்போர் கூறிய கருத்துக்களைத் தருக. மனித வள அபிவிருத்தியில் முன்பள்ளிப்பருவம் பெறும் முக்கியத்துவத்தை ஆராய்க.

04. ரூசோ இயற்கைவாதம் தொடர்பாகக் கூறும் கருத்துக்களை விளக்கி அக்கருத்துக்கள் ஒரு ஆசிரியர் தனது தொழிலைச்சிறப்பாக மேற்கொள்ள எந்தளவுக்கு உதவியாக அமையும் என ஆராய்க.

05. விவேகானந்தரது கல்வி மற்றும் சமூக, சமயக் கருத்துக்கள் இன்றைய இலங்கை மாணவர்கள், ஆசிரியர்கள், இளைஞர்கள் ஆகியோருக்கு எந்தளவுக்கு உயர்வு தருவனவாக அமைகின்றன என்பதை உதாரணங்கள் தந்து ஆராய்க.

06. பின்வருவனவற்றுள் மூன்றுக்கு விளக்கக் குறிப்புக்கள் எழுதுக.

(அ) கல்வியும் தனி மனித அபிவிருத்தியும்
(ஆ) கல்வியும் பொருளாதார அபிவிருத்தியும்
(இ) கல்விமூலம் தேசிய ஒற்றுமையை ஏற்படுத்தல்
(ஈ) சமூக மாற்றத்தை ஏற்படுத்துவதில் கல்வி ஒரு கருவி.
(உ) சிறுவர் உரிமை

07. "இன்று பாடசாலைகளில் பல்வேறு வழிகளில் வள விரயம் ஏற்படுவதாகக் கூறப்படுகின்றது". நேரவளம், மனிதவளம், பௌதீக வளம் என்பனவற்றைக் குறிப்பாகக் கொண்டு இக்கூற்றை ஆராய்க.

08. நீர்வாழும் சூழலில் உள்ள பாடசாலைச் சிறுவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை ஆராய்ந்து அவர்கள் தங்கள் கல்வியில் உயருவதற்கு எத்தகைய பங்களிப்பை உம்மால் வழங்க முடியும் என ஆராய்க.

*************